


Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 305

வியாழக்கிழமை
26 செப்ரெம்பர் 2024

... நாள்
... 2055

## யாழ்ப்பாண எம்.பி.க்களின் எண்ணிக்கையில் குறைப்பு

யாழ்ப்பாணம், செப். 26
வரவிருக்கும் பொதுத்தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.
2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலிருந்து ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்த நிலையில், இம்முறை அந்த எண்ணிக்கை ஆறாகக் குறைக்கப்பட்டுள்ளது.
இதேவேளை - வன்னித் தேர்தல் 11



## தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இன்று

### தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 26
இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உன்னத இலட்சியத்துக்காகப் பன்னிரண்டு தினங்கள் அகிம்சை வழியில் உண்ணாவிரதமிருந்து உயிர்துறந்த தியாகதீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நாள் நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளன. 11

## வடக்கு மாகாண ஆளுநராக பதவியேற்றார் வேதநாயகன்!

கொழும்பு, செப். 26
வடமாகாணத்தின் ஆளுநராக நாகலிங்கம் வேதநாயகன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் நேற்றுப் புதன்கிழமை பதவியேற்றுள்ளார்.
ஜனாதிபதி ரணிலால் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் பதவி விலகியதையடுத்து ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நேற்று புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன்படி வடமாகாண 11

## மக்களின் விருப்பப்படி நாடாளுமன்றம் இல்லை

### அதனால்தான் கலைத்தேன் ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, செப். 26
நாடாளுமன்றம் மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கவில்லை. ஆதலால்தான், நாடாளுமன்றத்தைக் கலைத்தேன் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். 11

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீண்டும் பலப்படுத்தத் திட்டம்!

### தமிழரசுக் கட்சியினர் பேச்சு

யாழ்ப்பாணம், செப். 26
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த கட்சிகள் மீண்டும் இணைந்து, நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் தமிழரசுக் கட்சியினர் நேற்றுக் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர். 11

## இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் முன்னேற்றமடைய முடியாது!


### ஜனாதிபதி அநுர நேற்று உரை

கொழும்பு, செப். 26
இன வேறுபாட்டை முடிவுக்குக் கொண்டுவராமல் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியாது. அதனால் இன நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
நாட்டுமக்களுக்கு நேற்று சிறப்புரையாற்றும் 11

## அநுரவைச் சந்திக்க வருகிறார் ஜெய்சங்கர்



கொழும்பு, செப். 26
ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்திப்பதற்காக, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அடுத்தவாரம் இலங்கைக்கு வரவுள்ளார்.
அநுர பதவியேற்றதைத் தொடர்ந்து 11




40% வரை விலைக்கழிவு !
சகல விதமான நில மற்றும் சுவர் டைல்களுக்கு
மற்றும் குளியலறை சாதனங்கள், சோபா வகைகள், அலங்கார மின்குமிழ்கள், தங்கொட்டுவ பீங்கான் வகைகளையும் எம்மிடம்பெற்றுக் கொள்ளலாம்.
MEGA CERAMICS MALL
469, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8157
நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
(யாழ் சிவன் கோவிலுக்கு அருகாமை)

மக்கள் ம... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கான கூட்டணி பேச்சுகள் ஆரம்பம்



கொழும்பு, செப். 26

நாடாளுமன்றத் தேர்தலுக்குரிய நாள் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய கூட்டணிக்கான பேச்சுகளும் அரசியல் களத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி, தமது கூட்டணியை விஸ்தரிப்பதற்குரிய வியூகத்தை வகுத்துவருகின்றது.

இதன்படி தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளுடன் பேச்சுகளை முன்னெடுப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன் ஆகியோர்தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

சஜித் கூட்டணியில் இடம்பெறுவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விருப்பம் தெரிவித்தாலும், அதற்கு திகாம்பரம் தரப்பு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது என அறியமுடிகின்றது.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டணி அமைப்பதற்குரிய முயற்சியில் இறங்கியுள்ளது. யானைச்சின்னம் வேண்டாம் என மொட்டு அணியில் இருந்து வந்தவர்களும், சுதந்திரக் கட்சியினரும் கூறினாலும் இது விடயத்தில் ஐ.தே.க. விட்டுக்கொடுப்புச் செய்யாது என்பதால், தினேஷ் குணவர்த்தன தலைமையில் மற்றுமொரு கூட்டணி பொதுத்தேர்தலில் களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த பொதுத்தேர்தலில் சுயாதீனமாகப் போட்டியிட்ட சமூக செயற்பாட்டாளர்கள் சிலர், இம்முறை தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பது பற்றி பரிசீலித்து வருகின்றனர். (ஓ-44)

## இலஞ்ச, ஊழல் வழக்கு
# விஜித ஹேரத்துக்கு அழைப்பாணை

கொழும்பு, செப்.26

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது தாக்கல் செய்யப்பட்ட இலஞ்ச ஊழல் வழக்குத் தொடர்பில் சாட்சியமளிக்க தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் 29ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் முன்னாள் தலைவர் சந்திரவங்ச பத்திராஜாவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் முறைப்பாட்டாளரான விஜித ஹேரத் சாட்சியமளிக்க நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

அதன்போது, விஜித ஹேரத் தரப்புச் சட்டத்தரணி, தனது கட்சிக்காரர் இன்று அமைச்சரவை அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளதால் சாட்சியமளிப்பதற்கு வேறொரு திகதியை வழங்குமாறு கோரியிருந்தார். இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மேல் நீதிமன்றம், விஜித ஹேரத்தை எதிர்வரும் நவம்பர் 29ஆம் திகதி சாட்சியமளிக்க மீண்டும் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டது.

2010ஆம் ஆண்டு தேசிய லொத்தர் சபையின் விளம்பர நடவடிக்கைகளில் தனியார் நிறுவனமொன்றுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தினால் அரசாங்கத்துக்கு 64 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாக இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மக்களின் நம்பிக்கையை அநுர காப்பாற்றவேண்டும்

வஜிர எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, செப்.26

வங்குரோத்து அடைந்த நாட்டை ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணயநிதியத்தின் உதவியுடன் மீட்டு தற்போது அந்தப் பொறுப்பை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கையளித்திருக்கிறார். புதிய ஜனாதிபதி அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவார் என நாங்கள் நம்புகிறோம்.

-இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் முன்வைக்கப்பட்ட தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த விடயங்களை செயற்படுத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க நாட்டை, வங்குரோத்து நிலையில் இருந்து விடுவிக்க மேற்கொண்ட வேலைத்திட்டங்களைவிட, இலங்கை மக்கள் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் முன்வைக்கப்பட்டிருக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்.

அந்த நம்பிக்கையை தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நிறைவேற்றட்டும். நாட்டில் மீண்டும் வரிசை யுகம் ஒன்று ஏற்படாமல் இருப்பதற்கு வழிவகுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# முன்னாள் எம்.பி.க்கள் ஒதுங்குவதற்கு முடிவு

கொழும்பு, செப். 26

நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடாதிருக்க நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் சிலர் தீர்மானித்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்திக்கான வெற்றிவாய்ப்பு தமது மாவட்டத்தில் அதிகம் என்பதால், போட்டியிட்டாலும் தோல்வி ஏற்படும் எனக் கருதும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களே, தேர்தலில் இருந்து ஒதுங்குவதற்கு முடிவெடுத்துள்ளனர் என அறியமுடிகின்றது.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தியுடன் இணைவதற்கு ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னெடுத்த முயற்சியும் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க பக்கம் நின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சஜித் அணியும் கதவடைப்புச் செய்துள்ளதால் ஒரு சில அரசியல்வாதிகளின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. (ஓ-44)

# நிறைவேற்றதிகாரத்தை நீக்கினால் ஆதரவு!

நாமல் தெரிவிப்பு



கொழும்பு, செப்.26

புதிய அரசாங்கம் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்கி தேர்தல் முறையில் மாற்றங்களை மேற்கொண்டால் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன அதற்கு ஆதரவளிக்கும் என்று நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

1994 முதல் ஜனாதிபதிகள் தாங்கள் நிறைவேற்றதிகார ஜனாதிபதிமுறையை நீக்குவோம் என தெரிவித்துள்ள போதிலும் இன்னமும் அதனைச் செய்யவில்லை.

நிறைவேற்றதிகார ஜனாதிபதிமுறையை நீக்குவதற்கான சிறந்த தருணம் இது.

அவர்கள் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்கவிரும்பினால் அதனை தாமதிக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச)






## ஜனாதிபதி அநுரவுக்கு
# பிரான்ஸ் ஜனாதிபதி தமிழில் வாழ்த்து!

கொழும்பு, செப்.26

இலங்கையில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள 9 ஆவது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தமிழில் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது முகநூல் தளத்தில் அவர் இட்டுள்ள பதிவில்,

"அன்புள்ள இலங்கை நண்பர்களே, உங்கள் ஜனாதிபதித் தேர்தல் சிறப்பாக நடைபெற்றதற்கு வாழ்த்துகள். இந்தத் தேர்தல், இலங்கையின் ஜனநாயகத்தின் வீரியத்தை பறைசாற்றுகின்றது. அநுர திஸாநாயக்க, உங்கள் வெற்றிக்கு எம் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்! இலங்கையுடன் இணைந்து செயற்படுவதற்கு பிரான்ஸ் தயாராக உள்ளது. நம்பிக்கையும், ஒத்துழைப்பும் நம் கூட்டுமுயற்சிகளுக்கு அடிக்கல்லாக அமையட்டும்" எனக் குறிப்பிட்டுள்ளது.

# அநுரவின் ஆளுமை மஹிந்த பெருமிதம்

கொழும்பு, செப்.26

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு, நாட்டை வழிநடத்தும் ஆளுமை உள்ளதாக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் மாற்றத்தை விரும்பும் மக்களின் தீர்மானங்களை தாம் ஏற்றுக்கொள்கிறோம்.

எமது தோல்விக்கான காரணங்களைக் கண்டறிந்து அதனைச் சரிசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். அதேவேளை நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் தமது கட்சியை மறுசீரமைக்கப் போகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலற்ற இலங்கை உருவாக வேண்டும்

## சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, செப்.26**

**அரசியல், சமூக மற்றும் பொருளாதார ரீதியில் நாட்டில் நிலவும் ஊழல் கலாசாரம் இனிமேல் இல்லாதொழிக்கப்படும் என எதிர்பார்ப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், நாட்டின் 9 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளது.

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றும் வலிமையும் தைரியமும் புதிய ஜனாதிபதிக்கு இருக்கும்.

சட்டத்தின் ஆட்சியும் நீதித்துறையின் சுதந்திரமும் தடையின்றிப் பேணப்படும் என்று புதிய ஜனாதிபதி மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை காப்பாற்றப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.


மேலும், இலங்கை சமூகத்தை ஒருங்கிணைத்து, இனம், மதம், சாதிகள் அற்ற இலங்கையை உருவாக்கி எம்மைப் பாதித்துள்ள இனங்களுக்கிடையிலான வேறுபாடுகள் களையப்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

## தேங்காய் விலை ரூ.150 வரை உயர்வு

கொழும்பு, செப்.26

சில பிரதேசங்களில் தேங்காய் ஒன்றின் விலை 150 ரூபா வரை உயர்ந்துள்ளதால் நுகர்வோர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிறிய சாதாரண அளவுள்ள தேங்காய் 120 ரூபாயில் இருந்து 137 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. இதனால் தேங்காய் எண்ணெய் விலை கூட உயர்ந்துள்ளது. 400 முதல் 420 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட சாதாரண தர தேங்காய் எண்ணெய் போத்தல் ஒன்றின் விலை 560 முதல் 600 ரூபா வரை அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)



## ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளராக மருத்துவர் நஜித் இந்திக்க

கொழும்பு, செப்.26

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் நாயகமாக மருத்துவர் நஜித் இந்திக்க நியமிக்கப்பட்டுள்ளார். அம்பாந்தோட்டை ரன்ன மத்திய கல்லூரி மற்றும் கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவரான இவர், கொழும்பு மருத்துவபீடத்தில் தனது மருத்துவப் பட்டப்படிப்பை நிறைவு செய்தார்.

கடந்த 5 வருடங்களில் பல அரச மருத்துவமனைகளில் மருத்துவராகவும் மருத்துவ அதிகாரியாகவும் இவர் கடமையாற்றியுள்ளார். மருத்துவர் நஜித் இந்திக்க பல்கலைக்கழக மாணவர் செயற்பாட்டாளர் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)



## அரச வாகனங்கள் மாயம் அநுர அதிரடி நடவடிக்கை

கொழும்பு, செப்.26

புதிய ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய கையளிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் பயன்படுத்திய வாகனங்களில் சில மாயமாகியுள்ளன எனத் தெரியவந்துள்ளது.

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக பதவியேற்றதன் பின்னர் முன்னாள் அமைச்சரவையின் அமைச்சர்கள் பயன்படுத்திய வாகனங்களைக் கையளிக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தார்.

குறித்த பணிப்புரைக்கமைய கையளிக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சரவையின் அமைச்சர்கள் பயன்படுத்திய வாகனங்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டுள்ளது.

இந்தநிலையில் மாயமான முன்னாள் அமைச்சரவையின் அமைச்சர்கள் பயன்படுத்திய வாகனங்கள் தொடர்பிலான விவரங்களை ஆராய்ந்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பணித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## ஹரிணிக்கு ஜூலி வாழ்த்து

கொழும்பு, செப்.26

இலங்கையின் மூன்றாவது பெண் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டு அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். இந்தப் பதவி நியமனத்தின் ஊடாக பெண் தலைவர்களுக்கான புதிய அலை உருவாகட்டும்.

இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மை மற்றும் நட்பினை மேலும் வலுப்படுத்திக்கொள்ள [illegible] ஜூலி சங் [illegible] தெரிவித்துள்ளார். (ச)



## தினம் தெரியுமோ?

இண்டைக்கு திலீபன்ர நினைவுநாள். நல்லூரில பசித்தீயோட பன்ரண்டு நாள் தன்னையே எரிச்சுப் போராடி மடிஞ்ச திலீபன்ர தியாகத்துக்கு முன்னால ஒருத்தரும் நிக்கேலாது. அப்பிடிப்பட்ட தியாகத்தை சிலர் தங்களுக்கு மட்டும் தான் உரித்து எண்டு சொந்தம் கொண்டாடப் பாக்கினம். ரண்டு, மூண்டு வருசமாவே யாழ்ப்பாணத்தில திலீபனுக்கு ஆர் நினைவேந்தல் செய்யிறது எண்ட பிடுங்குப்பாடு நடக்குது. தமிழ்த் தேசியம் தான் தங்கட மூச்செண்டு முழங்கிற முன்னணியில இருந்து மணிவண்ணன் பிரிஞ்ச பிறகுதான் இந்த ஏட்டிக்குப் போட்டி . ஒருக்கா திலீபன்ர நினைவுதினக் கடைசி நாளில தீபமெல்லாம் தட்டிவிழுத்தி பெரும் கொல்பாடு கூட நடந்தது.

அதுக்குப் பிறகு முன்னணிக்காரர் திலீபன்ர நினைவுத்தூபியில நினைவேந்தல் செய்ய, மணிவண்ணன் தரப்போ அதுக்குப் பக்கத்தில இருக்கிற மாநகரசபைக்குச் சொந்தமான காணியில திலீபனைப் பற்றின செய்திகள் வந்த பேப்பர் கட்டிங்குகள், அவரை நினைவுபடுத்துற பொருட்கள், திலீபன்ர வரலாறு எண்டு ஒரு அருங்காட்சியகப் பிளானில நினைவேந்தல் சதுக்கம் ஒண்டை அமைச்சவை. அதுக்கு சனத்திட்ட நல்ல வரவேற்பு. நினைவேந்தலுக்கு வந்த சனமெல்லாம் இந்தச் சதுக்கத்தைப் பார்த்திட்டு, 'இதுதான் உண்மையான நினைவேந்தல்' எண்டு வாய்விட்டே சொல்லிப்போட்டுப் போனவை. முக்கியமா எங்கட அடுத்த தலைமுறைக்கு திலீபன் எண்டால் ஆர்? அவர் ஏன் உண்ணாவிரதம் இருந்தவர்? எதுக்காக போராடினவர்? எண்ட விசயங்களை பார்த்தவுடனயே விளங்கிற மாதிரி இந்தச் சதுக்கம் இருந்தது. போனமுறையை விட இந்த முறை இன்னும் சில விசயங்களை தேடி யெடுத்து காட்சிக்கு வைச்சவை. இந்தமுறையும் அந்தச் சதுக்கத்துக்கு நிறையச் சனம் போய் பார்த்து, 'நல்லா இருக்கு' எண்டு புளுகமா சொன்னவை.

ஆனால் ஆரும் ஒருத்தன் நல்லது செய்தால் எங்கட ஆக்களுக்குப் பிடிக்காதே. அதை எப்பிடிக் குழப்பலாம் எண்டுதானே பாப்பினம். அந்தக்குணம் திலீபன்ர இந்த அருங்காட்சியத்துக்கே ஆப்பா வந்திட்டுதாம். திலீபன்ர நினைவுச்சதுக்கம் அமைக்கிற காணியை அடுத்த வருசத்துக்கு இப்பவே முன்னணிக்காரர் 'புக்' பண்ணிப் போட்டினமாம். அப்பிடிக் காணியைப் பிடிச்சதால அடுத்தவருசம் அந்த இடத்தில திலீபன்ர அருங்காட்சியகத்தை அமைக்க ஏலாத நிலைமை. இப்பிடி அருங்காட்சியம் அமைக்கிறதைத் தடுக்கிறதால முன்னணிக்காரருக்கு என்ன லாபம்? ஒருவேளை அவை இப்பிடி அருங்காட்சியம் போடப்போயினம் எண்டால் பரவாயில்லை. ஆனால் இப்ப போடுற அருங்காட்சியகத்தில இருக்கிற விச்யங்களை அவை எங்க தேடி எடுக்கப் போகினம்? சும்மா பந்தலைப் போட்டு, கொடியைக் கட்டி, பாட்டைப் போடுறதால எங்கட சந்ததியிட்ட திலீபன்ர நினைவுகளைப் பரப்ப ஏலாது. அதை உணர்வோட கலக்கச் செய்ய, இந்த அருங்காட்சியகம் மாதிரியான விசயங்கள் தான் தேவை. ஆனால் அப்பிடி ஒரு நல்ல வேலையைக் குழப்பிறதுதான் தங்கட கடன் எண்டு நடக்கிறவையை என்னெண்டு சொல்றது? இப்பிடி எங்கட நினைவேந்தல்களை நாங்களே நடத்தவிடாமல் சதி செய்துபோட்டு, பிறகு 'சிங்களப் பேரினவாத அரசு நினைவேந்தல்களைத் தடுக்குது' எண்டு வெளிவேசம் போடுறதில ஒரு பலனுமில்லை. எங்கட உரிமைகளை அழிக்க சிங்களவன் வரத்தேவையில்லை. இப்பிடிக் காணியை 'புக்' பண்ணி நினைவேந்தல்களை குழப்பிறவை இருந்தால், நல்லாத்தான் எங்களுக்கு உரிமை கிடைக்கும் கண்டியளோ.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நிர்வாகத் தெரிவும் காலபோகக் கூட்டமும்

யாழ்ப்பாணம், செப்.26

இருபாலை தெற்கு கமக்காரர்கள் அமைப்பின் புதிய நிர்வாக சபைத் தெரிவும், நெற் செய்கையாளர்களுக்கான வருடாந்த காலபோகக் கூட்டமும் தலைவர் தவராஜா தர்ஷன் தலைமையில் இருபாலை தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-45)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அனுசரித்துச் செல்வது நல்லது. அம்பிகையை வழிபடுவது நலம் சேர்க்கும். பண உதவி கிடைக்கும்.

**இடபம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். காரியங்கள் ஆதாயம் தருவதாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** மனதில் குழப்பம் நீங்கி தெளிவு பிறக்கும். செலவுகள் ஏற்படும். மாலையில் எதிர்பார்த்த பணம் கிடைக்கக்கூடும். அனுசரித்துச் செல்லவும். சங்கடங்கள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். தாயாரின் விருப்பத்தை நிறைவேற்றும் வாய்ப்பு கிடைக்கும். இலாபம் எதிர்பார்த்ததைவிட கூடுதலாகக் கிடைக்கும்.

**சிம்மம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். திடீர்ச் செலவுகளும் ஏற்படும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டியிருக்கும். வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு ஏற்படும். விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**கன்னி:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பாராத வேலைச்சுமையின் காரணமாக சற்று சோர்வு உண்டாகும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். விநாயகரை வழிபடுவது நன்று.

**துலாம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கும் எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பக்குவமாகச் சமாளித்து விடுவீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சற்று அலைச்சல் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மனஸ்தாபம் நீங்கும். பண உதவி கிடைக்கும்.

**தனுசு:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். அனுகூலப் பலன்கள் ஏற்படும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். வழிபாடு நலம் சேர்க்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும் . உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மகரம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. செலவுகள் அதிகரிக்கும். முருகப்பெருமானை வழிபடுவது நன்று.

**கும்பம்:** புதிய முயற்சியில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். காரியங்கள் இழுபறியாகும். பேசும்போது பதற்றம் வேண்டாம்.

**மீனம்:** அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு குறையும். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். செலவு செய்யவேண்டி வரும். கனிவாக நடந்து கொள்வது அவசியம். சிவபெருமானை வழிபட சிரமங்கள் குறையும்.

# முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், செப்.26

மானிப்பாய் இந்துக் கல்லூரி தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரி முதல்வர் துரைரட்ணம் திலீப்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்.பல்கலைக்கழக பழைய மாணவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன், வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி லாவண்யா சுகந்தன், தீவகக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்லையா இளங்கோ ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், வலம்புரிப்பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், பழைய மாணவர் "ஆசுகவி" செல்லத்துரை சுப்பிரமணியம், இளைப்பாறிய சங்கீத ஆசிரியர் சந்திரிக்கா கணேஸ்வரன் ஆகியோர் விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி)

# மஞ்சள்தூளில் கலப்படம் ரூ. 75,000 அபராதம்

யாழ்ப்பாணம், செப்.26

நீர்வேலி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் மஞ்சள் தூளில் கலப்படம் செய்து விற்பனை செய்தமைக்காக 75 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கே.உதயபாலா தலைமையிலான சுகாதாரப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட மஞ்சள் தூளின் மாதிரி அரச பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டபோதே குறித்த மஞ்சள் தூளில் கலப்படம் செய்யப்பட்டமை உறுதிசெய்யப்பட்டது.

அதற்கமைய மஞ்சள் தூளில் கோதுமை கலந்து கலப்படம் செய்த குற்றத்தில் உற்பத்தியாளர், விநியோகஸ்தர், வர்த்தக நிலைய உரிமையாளர் போன்றோருக்கே தலா 25 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது. (ச-17)

# பரிசளிப்பு நிகழ்வு

சாவகச்சேரி, செப்.26

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டின் பரிசளிப்பு நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் செ. பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி த. பிரதீபன், சிறப்பு விருந்தினராகத் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிராமி இராசதுரை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி-9)

# இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

முல்லைத்தீவு, செப்.26

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடியன் துப்பாக்கியை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அவர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரையும்,சான்றுப்பொருளையும் மீட்ட பொலிஸார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-45-19)

# மொழிப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும்




**சொக்கலிங்கம் லோஜினி**
மூன்றாம் வருட மாணவி
ஊடக கற்கைகள் துறை

புத்தளம் மாவட்டமானது தமிழ்மொழி பேசும் பிரதேசமாக பிரதேச காரியாலயமாக சந்திரிகாவின் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இருப்பினும் அங்கு தமிழ்மொழி பேசும் உத்தியோகத்தர்கள் குறைவாகக் காணப்படுவதால் மொழி சம்பந்தமான பிரச்சினைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் மக்கள் முகங்கொடுக்கின்றனர்.

புத்தளம் மாவட்டம் நான்கு மத மக்களையும் உள்ளடக்கிய மாவட்டமாக உள்ளபோதிலும் இங்கு சிங்களமொழி பேசுபவர்களே அதிகமாக உள்ளதால் சிங்களமொழிக்கு அதிக ஆதிக்கமுள்ளது.

உதாரணமாக மருத்துவமனைக்கு ஒரு தமிழரோ அல்லது முஸ்லிம் மக்களோ சென்றாலும் கூட அங்கு தமிழில் கதைப்பதற்கு சிரமமாகவே உள்ளது. அதேபோல் பிறப்புச் சான்றிதழ்களிலும் கூட பிறக்கும் குழந்தைகளின் பெயர்களை சரியாக எழுதாமல் பெயர்களில் பிழை ஏற்படுகின்றது. இதற்கு காரணம் சிங்கள உத்தியோகத்தர்களிடம் தமிழ் பேசும் மக்கள், குழந்தைகளின் பெயர்களை கூறும்போது அவர்கள் அதனை சிங்களமொழியில் பிழையாக உணர்ந்து பெயரை திரிபுபடுத்தி எழுதி விடுகின்றனர். இது எதிர்காலத்தில் அந்தப் பிள்ளைக்கு பெரும் பிரச்சினையை ஏற்படுத்தும். மேலும் வங்கிகளிலும் பிரதேச காரியாலயங்களிலும் பொலிஸ் நிலையங்கள் மற்றும் நகரசபைகளிலும் கூடப் பணிபுரியும் அனைத்து அரச உத்தியோகத்தர்களும் சிங்களமொழி பேசுபவர்களாகவே அதிகம் காணப்படுகின்றனர் .

ஓர் அலுவலகத்தில் மக்கள் ஒரு விண்ணப்பப் படிவத்தினை நிரப்பவேண்டும் என்றாலும் கூட அங்கு அந்த விண்ணப்பப் படிவமானது சிங்கள மொழியிலேயே உள்ளது. இதனால் சிங்களத்தில் தெரியப்படுத்தப்படும் அனைத்து விடயங்களையும் தமிழில் அறிந்து கொள்வதற்கு மக்களுக்கு தெரியவில்லை. நாம் தமிழில் பேசச் செல்லும்போது உங்களுக்கு சிங்களம் தெரியாதா என்று கேட்கும் பல உத்தியோகத்தர்கள் உள்ளனர்.

எனவே இதற்கு மாற்று வழிமுறையாக புத்தளம் மாவட்டத்தில் சிங்களமொழி பேசும் மக்கள் அதிகமாக இருப்பினும் இங்கு பணிபுரியும் இடங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் மும்மொழியிலும் பேசுபவர்களாக இருக்க வேண்டும்.

எனவே புத்தளத்தில் மட்டுமின்றி சிங்களமொழி பேசும் அனைத்து மாவட்டங்களிலும் இவ்வாறான பிரச்சினைகள் தமிழ் மக்களுக்கு இருப்பது என்பது சாதாரணமானதல்ல. எனவே இப்பிரச்சினை சார்பாக அரச உத்தியோகத்தர்கள் கவனம் கொள்ள வேண்டும் என்பது எனது கோரிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## திலீபம் எனும் தீயின் வெம்மை!

*தியாகதீபம் திலீபன் நீராகாரத்தைக்கூட அருந்தாமல் உணவைத் தவிர்த்து சாவைக் கண்முன்கண்டு அதை நேசித்து இறுகப்பற்றி 'உயிர்துறந்து' இன்றுடன் ஆண்டுகள் 37. விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் என்ற வகையில் திலீபனுக்குப் புலிச்சாயம் பூசினாலும், அந்தத் தியாகத் தீயின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கும், புலிகளின் ஆயுதங்களுக்கும் கொஞ்சமும் தொடர்பில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஆயுதப் போராட்டத்தின் வழியாக மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்வதையே தனது இலட்சியமாகக் கொண்டிருந்த போதிலும், அந்த அமைப்பைச் சேர்ந்த திலீபனின் போராட்டம் அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ஆயுதங்களும், இராணுவச் சீருடைகளுமற்ற நிலையில், தமிழ் இளையோரின் ஒரு பிரதிநிதியாகவே ஐந்து அம்சக் கோரிக்கைகளை பாரத தேசத்திடம் வலியுறுத்தி தன் கண்ணெதிரே சாவை ஏற்று கொஞ்சம் கொஞ்சமாக மாண்ட 'ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன்'தான் திலீபன்.*


தன்னை ஆயுதங்கள் சூழ்ந்திருந்த போதிலும் அஹிம்சை என்றால் என்ன என்று 'காந்தியத்துக்கும்' ஒட்டுமொத்த உலகத்துக்கும் பாடம் கற்பித்தவன் திலீபன். அத்தகைய தியாகச் செம்மலை, 'ஓர் ஆயுததாரி' என்பதான மனநிலையில் இருந்து அணுகுவதென்பதே ஆகப்பெரும் அபத்தம். அந்த இழிசெயலைத்தான் வழக்கம்போன்று மிகநேர்த்தியாக தருணம் பார்த்து இந்த வருடமும் செயற்படுத்த எத்தனித்தது பேரினவாத அரசாங்கம். நீதிமன்றங்களும் அவற்றின் நீதித் தராசுகளும் வளைந்து கொடுக்காத நிலையில் இன்றையதினம் தமிழர் தாயகத்திலும் இதர பகுதிகளிலும் உணர்வெழுச்சியுடன் அஞ்சலிக்கப்படுகின்றான் திலீபன்.

திலீபன் ஏன் அஹிம்சைப் போரில் குதித்துத் தன்னை ஆகுதியாக்கினான்? என்ற கேள்விக்கோ அல்லது புலிகள் ஏன் ஆயுதங்களை வரித்துக்கொண்டனர்? என்ற கேள்விக்கோ பதில் தேடுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் இன்றும்கூட கொஞ்சமும் தயாராக இல்லை. இந்த இரு கேள்விகளுக்குமான பதிலும் அதன் சாராம்சமும் ஒன்றுதான். 'அஹிம்சை இந்த உலகத்துக்குப் புரியாத மொழி' இதனால்தான் திலீபன் தன்னைத்தானே மாய்த்துக்கொண்டான். 'அஹிம்சை' செவிசாய்க்கப்பட்டிருந்தால் இன்று திலீபனுக்கு வயது 61. 'சிறிலங்கா அரசாங்கத்திடம் அஹிம்சையால் பேசுவது பயனில்லை' என்பதைத்தான் திலீபன் தன் சாவுமூலம் மக்களுக்கு உணர்த்தினான். புலிகள் ஆயுதங்களை வரித்துக் கொண்டமைக்கான காரணமும் அதுவேதான்.

ஆனால் திலீபனின் தியாகத்தையும், ஈழத்தமிழரின் வாழ்வியலில் அவன் எவ்வளவுதூரம் தவிர்க்கப்பட முடியாதவன் என்பதையும் அடுத்த சந்ததிக்குச் சரிவரக் கடத்துகின்றோமா? என்றால் அதற்குரிய பதில் நிச்சயம் 'தொலைநோக்குப்பார்வை' கொண்டதாக அமையாது. திலீபனை அஞ்சலிப்பது என்ற பெயரில் வாகனப் பவனிகளை நடத்துவதையோ அல்லது எழுச்சிக் கீதங்களை இசைக்க விடுவதையோ நாம் முழுமையான அஞ்சலிப்பாகக் கொள்ளமுடியாது. அஞ்சலிப்புகள் ஆத்மார்த்தமான உள்ளுணர்வுடன் இரண்டறக் கலந்தவை. திலீபனின் ஐந்து அம்சக் கோரிக்கைகளை இன்று எத்தனை இளைஞர்கள் தெரிந்து வைத்திருக்கின்றனர்? கட்சிகளை முதன்மைப்படுத்திய அஞ்சலிகளால் இவ்வாறான வரலாறுகளை முழுமையாக ஊடுகடத்திவிட முடியாது. திலீபன் ஏன் சாவை கண்முன் நேசித்தான்? தாயகத்துக்கு ஏன் திலீபன் தேவைப் பட்டான்? என்ற தெளிவை ஒவ்வொரும் தம் இளைய சந்ததிக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும். கட்சிக் கொடிகளின் கீழ் மேற்கொள்ளப்படும் அஞ்சலிப்புகளை விட, வரலாற்றைப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பது பல மடங்கு நேர்த்தியான மேலான செயலாகவே அமையும். திலீபனைக் கற்றுக்கொடுங்கள். அதைத்தான் திலீபன் நேசிப்பான். ஏனெனில் திலீபன் தமிழ் மக்களை எல்லையற்று அன்புசெய்தார்.

*என் மக்கள் மீதுள்ள தாளாத பாசத்தின் பேரில், அவர்களின் விடிவுக்காக நான் 651ஆவது விடுதலைப் புலியாக என் தோழர்களை நோக்கி மெதுவாகப் போய்க்கொண்டு இருக்கின்றேன். மக்கள் புரட்சி வெடிக்கட்டும்.*

*- இ.திலீபன்*



# பிரசார செலவுப்பட்டியலை விரைந்து சமர்ப்பிக்குக!

### ஜனாதிபதித்தேர்தல் வேட்பாளர்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு பணிப்பு

**கொழும்பு, செப்.26**

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் தமது பிரசார செலவுப் பட்டியலை சமர்ப்பிக்க வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதித்தேர்தல் முடிவுகள் வெளியான 21 நாள்களுக்குள் அது தொடர்பான அறிக்கையை ஆணைக்குழுவில் சமர்ப்பிக்குமாறு 38 வேட்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையத்திடம் அறிக்கைகள் வழங்கப்பட்ட பிறகு, அவை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். தவறான செலவு அறிக்கைகள் இருந்தால், சரிபார்க்கக்கூடிய ஆவணங்களுடன் பொலிஸில் யார் வேண்டுமானாலும் முறைப்பாடு செய்யலாம். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர், வாக்காளர் ஒருவருக்கு செலவிடும்தொகை 109 ரூபா எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதன்படி, 17,140,354 வாக்காளர்களுக்கு ஒரு வேட்பாளர் பிரசாரச் செலவுக்கு செலவிடக்கூடிய அதிகபட்ச வரம்பு 186 கோடி ரூபாவாகும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ச)

### ஜனாதிபதி அநுரவின் செயலாளராக

## ஆனந்த விஜயபால

கொழும்பு, செப்.26

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியில் ஊழல் எதிர்ப்புச் செயலகத்தின் செயலாளராகப் பணிபுரிந்த ஆனந்த விஜயபால ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பிரத்தியேக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் நீண்டகாலம் அநுரகுமார திஸாநாயக்கவின் பிரத்தியேக செயலாளராக கடமையாற்றியுள்ளதுடன் தேசிய மக்கள் சக்தியின் புத்திஜீவிகள் அமைப்பின் தேசிய அமைப்பாளராகவும் இருந்துள்ளார். (ச-25, 6)

## புதிய தலைவர்கள் நியமனம்

கொழும்பு, செப். 26

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக சிரேஷ்ட விரிவுரையாளரும் புகழ்பெற்ற திரைப்பட இயக்குநருமான கலாநிதி செனேஷ் திஸாநாயக்க பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி உதித கயாஷன் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-சி)

## பணவீக்கம் ஓகஸ்ட்டில் சரிவு

கொழும்பு, செப்.26

இந்த வருடம் ஜூலை மாதம் 2.5 சதவீதமாக இருந்த பணவீக்கம் கடந்த ஓகஸ்ட் மாதம் 1.1 சதவீதமாகக் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் மாதாந்திர நுகர்வோர் பணவீக்கத்தை சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்கள அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும், 2024 ஜூலையில் 2.2 சதவீதமாக இருந்த உணவல்லாத வகையின் பணவீக்கம் ஓகஸ்ட் 2024 இல் 0.2 சதவீதமாக குறைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

**நாளை**

**27.09.2024**

வெள்ளிக்கிழமை - புரட்டாதி - 11

சுபநேரம் : 06.02 - 07.32

ராகுகாலம் : 10.32 - 03.02

**நாளொரு நல்வார்த்தை**

**அனுகுமுறை என்பது பெரிய மாற்றத்தை உண்டாக்கக்கூடிய ஒரு சிறிய விடயமாகும்.**

*- வின்ஸ்டன் சர்ச்சில்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கான தீர்வே நாட்டை முன்னோக்கி நகர்த்தும்

## கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப். 26

**நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால் இந்த நாட்டினுடைய இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். அதற்குரிய அனுகுமுறைகளையும் நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு புதிய ஜனாதிபதி உடனடியாக இறங்கவேண்டும்.**


- இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற திலீபன் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அநுரகுமாரவும் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய ஒருவராக இருக்கின்றார். அவர்கள் சோசலிசவாதிகளாக தங்களைக் காட்டிக்கொண்டிருந்தாலும் அவர்களது அமைப்பு தமிழர்களுக்கு எதிரான இன அழிப்புக்கு கடந்தகாலங்களில் முழுமையாக துணைநின்றது. தற்போது நாட்டின் ஆட்சி அதிகாரத்தை அவர்கள் பிடித்துள்ளனர்.

நாங்கள் அனைவரையும் அரவணைத்துச்செல்வோம் என்று அவர்கள் சொல்வது கேட்பதற்கு இனிமையாக இருக்கலாம்.

ஆனால் அவர் தமிழர்களின் விருப்பங்களை ஏற்றுக்கொண்டு அந்த விருப்பங்களை அங்கீகரித்து தமிழர்களை இந்த நாட்டின் ஆட்சியிலே பங்காளிகள் ஆக்குவதற்கு துணியவேண்டும். நாட்டினுடைய எதிர்காலத்தை முன்னோக்கி நகர்த்துவதற்கு தமிழர்களின் பங்களிப்பை பெறுவதற்கான அத்திபாரத்தை நீங்கள் இடவேண்டும். அதற்குரிய அனுகுமுறைகளையும் நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு நீங்கள் உடனடியாக இறங்கவேண்டும்- என்றார். (ச-25, 110)



# திலீபனின் நினைவு ஊர்தி வவுனியாவை அடைந்தது!

வவுனியா,செப்.26

தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தி கடந்த திங்கட்கிழமை வவுனியாவை அடைந்த நிலையில் வவுனியா நகரசபைக்கு முன்பாக அமைந்துள்ள பொங்கு தமிழ் நினைவுத்தூபியில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது திலீபனின் திருவுருவப்படத்துக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தமிழர்தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள்,ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர். (ச-25, 110)

# சுயாட்சி வேண்டி ஹோம வழிபாடு

கொழும்பு, செப். 26

தமிழ்மக்கள் சுயாட்சி பெற்று மகிழ்வோடு வாழ வேண்டி அடுத்தமாதம் 15, 16 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் கந்தர்மடம் இந்துசமயப் பேரவை வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமானுக்குச் சிறப்புக் ஹோமங்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

15 ஆம் திகதி மாலை இடம்பெறும் நிகழ்வில் கடந்த காலப் போரில் தாய், தந்தையரை இழந்த பாடசாலை செல்லும் பிள்ளைகள் உள்ள பல குடும்பங்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த பணிக்கு உதவ விரும்புவோர் A/C No. 1060024270 என்ற இந்துசமயப் பேரவையின் கொமர்ஷல் வங்கிக் கணக்கு ஊடாகப் பணம் அனுப்பி உதவ முடியுமெனவும் இந்துசமயப் பேரவையின் தலைவர் ஈசான. சிவசக்திகிரீவன்தெரிவித்துள்ளார். மேலதிக விவரங்களுக்கு 0761688277 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-66)

# தேசிய சாரணர் வாரம் கிளிநொச்சியில் ஆரம்பம்

கிளிநொச்சி, செப்.26

நாடுபூராகவும் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை வரை தேசிய சாரணர் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு முதலாவது நாள் நட்பு என்ற தொனிப்பொருளிலான வேலைத்திட்டம் கிளிநொச்சி மாவட்ட சாரணிய சங்கத் தலைவர் கி.விக்கினராஜா தலைமையில் மாவட்ட செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலர் எஸ்.முரளீதரன், மாவட்ட மேலதிக செயலர் நளாயினி இன்பராஜ், மாவட்ட சாரணிய ஆணையாளர் சு.விக்கினேஸ்வரன், பாடசாலைகளின் சாரணிய பொறுப்பாசிரியர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். சாரணர் வாரத்தில் நட்பு, இளைஞர்கள், சமயம், சுற்றாடல், தொகைமதிப்பு என்ற தொனிப்பொருள்களில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ச- 25-113)





# அரியநேந்திரனின் சேவைகள் தமிழருக்கு கிடைக்கவேண்டும்

## விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப். 26

அரியநேந்திரனின் தமிழ் மக்களுக்கான அரசியல் சேவை தொடரவேண்டும் என்றும் அது தமிழ் மக்களுக்கு இன்றைய காலகட்டத்தில் அவசியம் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட அரியநேந்திரனுக்கு எனது இதயபூர்வமான நன்றிகள். எந்த விதமான சுயநலனும் இல்லாமல் தமிழ்த்தேசிய எழுச்சியின்பால் கொண்ட பற்றுறுதியின் காரணமாக அரியநேந்திரன் இந்தத் தேர்தலில் போட்டியிட முன்வந்தமை தமிழ் மக்களின் மத்தியில் அரசியல் ரீதியான ஒரு விழிப்புணர்வையும் அணிதிரட்டலையும் ஏற்படுத்தியிருக்கின்றது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

ஜனாதிபதித் தேர்தலில் அவர் எந்த விதமான சலிப்பையோ, தயக்கத்தையோ அல்லது சோர்வினையோ வெளிக்காட்டாமல் ஒரு இளைஞர் போன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மூலை முடுக்குகள் எல்லாம் பயணம் செய்து தமிழ் மக்களை அணிதிரட்டுவதற்கு பாடுபட்டிருந்தார்.

அவரின் துணிச்சலானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஒற்றுமை ஒன்றிணைவின் குறியீடாக மிளிர்கிறது. அந்த வகையில் அரியநேந்திரனின் தமிழ் மக்களுக்கான அரசியல் சேவை தொடரவேண்டும் அது தமிழ் மக்களுக்கு இன்றைய காலகட்டத்தில் அவசியம் - என்றுள்ளது. (ச-20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

பிரசித்திபெற்ற தனியார் நிறுவனமொன்றில் வேலைவாய்ப்பு உள்ளது.

தகைமைகள் : க.பொ.த சாதாரண தரம் கணிதம் உட்பட 06 பாட சித்தி.

வயதெல்லை : 19 - 55 வயது. ஆண் , பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு : வடமராட்சி எல்லைக்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 028 3537

# இனஅடக்குமுறையை ஒழிக்காவிடின் பொருளாதாரம் உயர்வடையாது!

சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

**கொழும்பு, செப்.26**

**புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் ஒத்துழைப்பு போன்றவை நாட்டுக்கு மிக மிக அவசியமானவை. அவர்களுடைய ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் இந்த நாட்டின் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதார பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றால் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

குறிப்பாகக் காணிகளைப் பறிமுதல் செய்தல் , காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, வடக்கு – கிழக்கில் இனம் பரம்பலை மாற்றக் கூடிய வகையிலான செயற்பாடுகளை முன்னெடுத்தல் தொடர்பான செயற்பாடுகள் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.சமத்துவத்தை பேணக்கூடிய, சகல இனங்களையும் கலாசாரம், பண்பாடுகளைப் பேணக்கூடியவர்கள் என்ற வகையில் இவ்வாறான விடயங்கள் நடக்காத வகையில் கட்டுப்படுத்த வேண்டும். இன அடக்குமுறைக்குள் பாதிக்கப்பட்ட மக்கள் விரும்பக்கூடிய வகையில் இனமத பேதமின்றியே சமூகம் உருவாக்கப்பட்டாலேயே நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெ டுக்க முடியும். இதனை புதிய ஜனாதி பதி புரிந்து கொள்ள வேண்டும் – என்றார்.

(ச)

## 6ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 . 12 . 2001

உதிர்வு 26 . 09 . 2018

### பேரின்பநாதன் பிரசாந்தன்

நீ எங்களை விட்டுப் பிரிந்து சென்றாலும்
நாங்கள் உன்னை நினைத்தவுடன்
என்றும் நீ இருப்பாய் எங்கள் கண்ணில் கண்ணீராக
எம்மைப் பிரிந்து ஆறு வருடங்கள் ஆனாலும்
உன் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு விலகவில்லை
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

தல்லையப்புலம்,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

உன் பிரிவால் துயருறும்
அம்மா மற்றும் குடும்பத்தினர்.
074 049 4787

## விண்ணப்பப்படிவம் கோரல்

வட இலங்கைச் சங்கீத சபையின் 2025 ஆம் ஆண்டுக்கான தரம்–1 தொடக்கம் 6 வரையான தரங்களுக்கான பரீட்சை விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவத்தை வட இலங்கைச் சங்கீதசபையின் WWW.ncomsjaffna.com எனும் இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வட இலங்கைச் சங்கீதசபையின் தலைவர் திருமதி ஜமுனா ராஜசீலன் தெரிவித்துள்ளார்.

(ச–45–66)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 02 . 07 . 1937

மறைவு 27 . 08 . 2024


நவாலியைப் பிறப்பிடமாகவும், தொல்புரம் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட

### நாகேசு தவபாக்கியம்

நெஞ்சுருக்கும் செய்தி ஒன்று
நொடிப்பொழுதில் நாம் அறிந்தோம்
தாங்கமுடியவில்லையே! தாங்கமுடியவில்லையே!
அன்பின் திருவுருவமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் விளங்கிய அம்மம்மாவே!
உங்களை போல ஒரு தெய்வம் இங்கே இல்லை
உங்கள் அன்புக்கெல்லாம் ஒரு கோவில்
எங்கேயும் இல்லை அம்மம்மா.
31 நாட்கள் என்ன 31 ஆண்டுகள் சென்றாலும் உம்
நினைவுகள் எம்மைவிட்டு என்றும் பிரியாது.
எம் விழிநீர் தாங்காத வேதனையில் தாழாமல்
தவிக்கின்றேன்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
அன்புப் பேரன்
சாந்தன்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 06 . 1961

மறைவு 24 . 09 . 2024

### முருகேசு சேரழகன்

(ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியர் - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், ஐயனார் கோவில் வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு சேரழகன் அவர்கள் நேற்றுமுன்தினம் (24.09.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு மற்றும் - ராசமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருந்தவநாதன் மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், யசோதாவின் அன்புக் கணவரும், மதுசன் ஜானுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பூவழகி, பூங்குழலி, வேங்குழலன், யாழினி, செங்கையாழியன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மகிந்தன் மற்றும் சகிந்தன், வினோதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 105, ஐயனார் கோவில் வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்தில் இன்று (26.09.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணி அளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

105, ஐயனார் கோவில் வீதி,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
076 549 6846
076 410 7966

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை
உப அலுவலகம், ஏழாலை.
வட்டாரம்-06, பூதவராயர் கோயில் வீதி, ஆதன இல - 30

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத் திற்குட்பட்ட **பூதவராயர் கோயில் வீதி ஏழாலை மத்தி, சுன்னாகம்** எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் **வட்டாரம்-06, பூதவராயர் கோயில் வீதி, ஆதன இல: 30 ல் K. சின்னத்தம்பி** எனும் பெயரில் உள்ளது. பிரசித்த நொத்தாரிசு கா.சி.செ. முத்துக்குமாரு முகதாவில் வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்குப்பகுதி, மல்லாகம் கோவிற்பற்று, ஏழாலை மத்தி கிராமம், வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவு, J/206 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள ஏழாலை இறை "செம்பி சீமா" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 1 உடைய ஆதனமானது 1998.07.31 ஆம் திகதிய 4388 ஆம் இலக்க உறுத் மூலம் கணபதி சின்னத்தம்பி கைம்பெண் சின்னாச்சியினால் வெளிப்படுத்தல் செய்யப்பட்டு, பின்னர் 4389ஆம் இலக்க 1998.07.31ஆம் திகதியில் பிரசித்த நொத்தாரிசு கா.சி.செ. முத்துக்குமாரு எழுதிய நன்கொடை உறுதி வாயிலாக கணபதி சின்னத்தம்பி கைம்பெண் சின்னாச்சியிடமிருந்து சின்னத்தம்பி மகள் சுசீலாவைச் சென்றடைகின்றது.

அதன் எல்லைகளாக,
கிழக்கு- ஒழுங்கை
வடக்கு- தம்பிராசா வள்ளிப்பிள்ளை
மேற்கு- க. சுந்தரம்
தெற்கு- ஒழுங்கை

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் C. Vishvanathan அவர்களால் 2024.08.17 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 1562 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 ஆகிய நிலப்பரப்பு 00 குழி 16.07 ஆகும். இவ் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு கா.சி.செ.முத்துக்குமாரு அவர்கள் மூலம் 1998.07.31 ஆம் திகதிய 4389 ஆம் இலக்க நன்கொடை உறுதியால், பூதவராயர் கோயில் வீதி ஏழாலை மத்தி சுன்னாகம் என்னும் இடத்தை சேர்ந்த சின்னத்தம்பி மகள் சுசீலா (676202455V) எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது சின்னத்தம்பி மகள் சுசீலா எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.
சுன்னாகம்.

# மத்திய வங்கி ஆளுநருடன் ஜனாதிபதி கலந்துரையாடல்

கொழும்பு, செப்.26

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவும் கலந்து கொண்டார் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கும் பல விடயங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

## இயன்றவரை முயன்று இளையோரே எழுவீர்

எமது மக்களின் இன்றைய அவலநிலை கண்டு அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு தனது செயற்பாடுகளை விரிவாக்கம் செய்ய முயலுகின்றது.

தமிழர் தேசத்தில் புரையோடிப்போயிருக்கின்ற அரசியல் அபிலாசைகளை இதுவரை காலமும் தமிழ் மக்கள், தங்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் அரசியல்வாதிகளை நம்பி உப்புச் சப்பில்லாத தீர்வுகளையும், சிங்கள தலைவர்களுடன் சேர்ந்து திட்டமிடுவதுடன் தாங்களும் ஏமாறுவதுடன், தமிழ் மக்களையும் ஏமாற்றி தமிழ் மக்களின் இருப்பையே கேள்விக்குறியாக்கும் வயது முதிர்ந்த தமிழ் அரசியல்வாதிகளை முற்றாக அரசியல் அரங்கிலிருந்து அப்புறப்படுத்தி, தமிழர் தேசத்தை நேசிக்கின்ற, தமிழ் மக்களை உளமாற விரும்புகின்ற, புரட்சிகரமான சிந்தனையுடைய, தமிழர் அரசியலைத் தலைமை ஏற்று நடாத்த விரும்புகின்ற ஒழுக்கமுள்ள இளைஞர் சந்ததியை வரவேற்று நாங்கள் எங்கள் பாசறையை திறந்து வைத்திருக்கிறோம்.

ஆள வேண்டுமென்றோ வாழ வேண்டுமென்றோ ஆசை கொள்ளாமல் ஒரு புரட்சிகரமான தூய அரசியலை எம் மண்ணில் தோற்றுவிப்பதே எம் இலட்சியமாகக் கொண்டு தமிழ் இளையோருக்கு நாங்கள் அறைகூவல் விடுக்கின்றோம்.

நான் பெரிது நீ பெரிது என வாழாமல் நாடு பெரிது என நினைத்து எங்களுடன் கைகோருங்கள்.

**தம்பி தம்பிராஜா-ஒருங்கிணைப்பாளர்**
**077 730 1961, 074 005 5961**
அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு
DEMOCRATIC ORGANISATION AGAINST OPPRESSION




## ஜனாதிபதி அநுரவுக்காக பாற்சோறும், பாயாசமும்

யாழ்ப்பாணம், செப்.26

புதிய ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக பதவியேற்றுள்ள நிலையில் நேற்று யாழ்ப்பாணத்தில் வெற்றிக் கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்பட் டுள்ளன.


நாவற்குழி சந்தியில் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களால் பொதுமக்களுக்கு பாற்சோறும், பாயாசமும் வழங்கி வைக்கப் பட்டது.

இதில் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், யாழ் மாவட்ட அமைப்பாளருமான இராமலிங்கம் சந்திரசேகர், கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ச-27)

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

தோற்றம்
15.07.1947



மறைவு
23.09.2024

**கதிரேசு செல்வராசா (செல்வம்-ஆசாரி)**

அம்பலவாணர் வீதி உடுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு செல்வராசா அவர்கள் கடந்த 23.09.2024 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு-சரஸ்வதி தம்பதியரின் அன்புப் புதல்வனும் சுப்பிரமணியம்-தங்கமணி தம்பதியரின் அன்பு மருமகனும் கௌசலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஈஸ்வரியம்மா, கனகநாயகம் மற்றும் நவரட்ணம், செல்வரட்ணம், பத்மநாதன் ஆகியோரின் சகோதரனும் சைலயன் (Vishvakarma Civil Production (Pvt) Ltd-Director) சோபிதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெனார்த்தனின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கமலாம்பாள், தெய்வேந்திரராசா, சற்குணராசா மற்றும் குகராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.09.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**131, அம்பலவாணர் வீதி,**
**உடுவில், சுன்னாகம்.**

(CS 1445) V-1

தகவல்:
குடும்பத்தினர்.
077 384 8826

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவு



அன்னை மடியில் 06.06.1970
அம்மன் அடியில் 09.10.2012

**அமரர் காயத்திரி பாலமுரளீதரன்**
(முன்னாள் ஆசிரியர் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

திதி : அபரபக்க நவமி

அன்னையவள் நினைவுகள்
அழியாத சுவடுகள்
தேனூறும் உம் வார்த்தைகள்
விரைந்து மறைந்ததுவே
ஈராறு ஆண்டுகளும்
ஓடி மறைந்ததுவே - இருந்தாலும்
மாறாது உம் நினைவு - நாம்
மண்ணில் வாழும் வரை
அன்னையவள் பாதம் பற்றிய - உங்கள்
பதம் பற்றி கரம் கூப்பி
வணங்குகிறோம் அனுதினமும் அம்மா
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

ஆறாம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம்.

குடும்பத்தினர்

## விளையாட்டு

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகம் சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு நடத்தும் முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்மன் கோவில் முன்பாக நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் குறித்த விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் பங்குபற்ற முடியுமெனச் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

(ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் உரிமைகள் காக்கப்படுவதை உறுதிசெய்க!

## கனேடியத் தமிழர் பேரவை வலியுறுத்து

கொழும்பு, செப்.26

சமத்துவம், நீதி மற்றும் பிரதிநிதித்துவம் ஆகிய விடயங்களைப் பொறுத்தமட்டில் இலங்கை வாழ் தமிழ் மக்கள் குறிப்பிடத்தக்களவிலான சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றார்கள். அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும், இலங்கையின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதில் அவர்களின் முழுமையான பங்கேற்பை உறுதிப்படுத்துவதற்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என கனேடியத் தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதொடர்பில் கனேடியத் தமிழர் பேரவையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டதாவது:

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எமது வாழ்த்துகளைக் கூறுகின்றோம். இலங்கையின் அரசியல் வரலாற்றில் அவரது வெற்றி மிகமுக்கியமானது.

இது மக்கள் மாற்றத்தையும், மறுசீரமைப்பையும் விரும்புவதைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் ஜனாதிபதி என்ற ரீதியில், அவரது அரசாங்கம் தமிழ்ச்சமூகத்தின் நீண்டகால அரசியல் அபிலாஷைகளுக்குரிய தீர்வை வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும், இலங்கையின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதில் அவர்களின் முழுமையான பங்கேற்பை உறுதிப்படுத்துவதற்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என நம்புகின்றோம்- என்றுள்ளது. (ச)

# நம்பிக்கை ஒளியை காப்பாற்ற வேண்டும்

## சந்திரகுமார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 26

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டிருப்பது மாற்றத்தை விரும்பும் மக்களிடம் நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தியிருக்கிறது. இதனை சரிவர செய்து மக்களின் அபிமானத்தை காத்துக் கொள்ளவேண்டும்.

-இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நடந்துமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில், வரலாற்று வெற்றியொன்றை தம்வசப்படுத்தி, இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார்.

சமத்துவக் கட்சியின் சார்பில் அவருக்கு வாழ்த்துகள். அரசியல் மாற்றம் ஒன்றை வேண்டி பல்வேறு தசாப்தங்களாகக் காத்திருக்கும் இலங்கையர்களுக்கு, தங்களது வருகை, நம்பிக்கையின் ஒளியை வீசி சென்றிருக்கிறது.

ஈழத்திருநாட்டை, இந்து சமுத்திரத்தின் செழுமைமிகு நாடாக மீளக் கட்டியெழுப்பும் தங்களது முயற்சிகளுக்கு,எமது கட்சியின் ஆதரவும், ஆசீர்வாதமும் எப்போதும் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25,214)

# உண்ணாவிரத போராட்டம்

யாழ்ப்பாணம், செப்.26

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய ஆலயம் முன்பாக நபரொருவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். குறித்த ஆலயத்தில் உள்ள நிர்வாகத்தின் முறைகேடுகளைக் கண்டித்தும் ஆலயத்தில் தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாகத்தை சுமுகமாக இயங்கவிடுமாறு போராட்டத்தை முன்னெடுப்பதாக அவர் தெரிவித்தார். (ரி-20)



# விமானங்கள் விற்பனைக்கு

பொருளாதார நெருக்கடி காரணமாக, பாகிஸ்தானின் தேசிய விமான நிறுவனத்தை ஏலத்தில் தனியாருக்கு விற்பனை செய்வதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (ம)




# யாழ்.போதனா மருத்துவமனைக்கு அவுஸ்திரேலிய நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம், செப்.26

அவுஸ்திரேலிய மருத்துவ உதவி நிறுவனத்தினால் அவுஸ்திரேலியாவிலிருந்து அண்மையில் அனுப்பி வைக்கப்பட்ட 50 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவத்துறை சார்ந்த பல்வேறு உபகரணத் தொகுதிகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பயன்பாட்டுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த உபகரணத் தொகுதிகளை அனுப்பி வைத்த அவுஸ்திரேலிய மருத்துவ உதவி நிறுவனத்துக்கும் அவுஸ்திரேலிய மக்களுக்கும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவ[illegible] நன்றி தெரிவித்துள்ளனர். (ச-25. 20,66)

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 02 . 1937



மறைவு 25 . 09 . 2024

## சூசைப்பிள்ளை பெனடிக்ற் (சிறில்)

(உரிமையாளர்-லைடன் ரெக்ஸ்ரைல் சென்ரர், யாழ்ப்பாணம்)
(முன்னாள் உரிமையாளர்-நிகம்பு பார்மசி), முன்னாள் பங்காளர்-சிற்றி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் நீர்கொழும்பு, Crowns, நீர்கொழும்பு)

யாழ் கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் 27 சுவாட்ஸ்லேன், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை பெனடிக்ற் (சிறில்) அவர்கள் நேற்று (25.09.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை-ஆரோக்கியம் (இராசம்மா) தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கிறிஸ்சோஸ்ரொம் பொன்ராசா-எலிசபெத் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற யூலியற் ஜெயசீலியின் அன்புக் கணவரும், பீற்றர் ஜெயக்குமார் (அவுஸ்திரேலியா), ஜெயந்தினி (லண்டன்), அன்ரனி ஜெயந்திரன் (லண்டன்), ரூபினி டேவிற் (கொழும்பு), வதனி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பியூலா (அவுஸ்திரேலியா), பிலிப் கொன்ஸ்ரன்ரைன் (சுரேஸ்-லண்டன்), ஜெனி (லண்டன்), ஜீவன் (கொழும்பு), தனு ஜோசப் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும்,, காலஞ்சென்ற வைலட், வீடா (கிளி), சிசிலியா (சாளற்-சுவீஸ்), அருளானந்தம் டொமினிக் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஜோசப்அன்ரன், புளோரன்ஸ் விமலா மற்றும் பிலிப் ஜெயராஜ், அலிஸ்ரன் தேவராஜ் (ஜேர்மனி), இம்மனுவல் அருள்ராஜ் (ஜேர்மனி), ஆன்திருநெற் (லண்டன்), ராசா, மரியதாசன், மரியநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜோஸ்சுவா, ஜொகானா, கிறேஸ், கிடியான், பென்ஜமின், ஹனா, வில்லியம், மரியா, ரவின், ரீனா, கவின், கிறிஸ்ரின், மரியன், டானியேல் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

27, சுவாட்ஸ் லேன்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
021 222 6310

தகவல்:
பீற்றர் ஜெயக்குமார்: 0061 412 215 286/ 077 148 4540
அன்ரனி ஜெயந்திரன்: 0044 7956 44 9827/ 076 673 7262
கிளமென்ரைன் கொன்ஸ்ரன்ரைன் ஜெயந்தினி: 004479460 55157
ரூபினி டேவிட்: 077 531 3203
வதனி ஜோசப்: 0061 413213442

(CS 1448) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முடிவுக்கு வரவுள்ள உக்ரைன் போர்!

## ஷெலன்ஸ்கி நம்பிக்கை

நியூயோர்க், செப்.26
உக்ரைன் போர் முடிவுக்கு வரும் தறுவாயில் உள்ளது என்று உக்ரைன் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.
குவாட் அமைப்பின் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள ஷெலன்ஸ்கி அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
ரஷ்யப் போரில் அமைதிக்கு மிக அருகில் நெருங்கியுள்ளோம் என்று கருதுகின்றோம். போரை முடிவுக்குக் கொண்டுவரும் தறுவாயில் உள்ளோம் என்று அவர் தெரிவித்துள்ளார். நேட்டோ கூட்டமைப்பில் உக்ரைன் இணைய முயன்றதால் ரஷ்யா 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் உக்ரைன் மீது தாக்குதலை ஆரம்பித்தது.
இந்தப் போரில் உக்ரைனுக்கு ஐரோப்பிய யூனியன் நாடுகளும், அமெரிக்காவும் ராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கி வருகின்றன. சீனா, வட கொரியா போன்ற நாடுகள் ரஷ்யாவுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றன.

# ஹமாஸின் முக்கியஸ்தர் யாஹ்யா சின்வார் மாயம்

ஜெருசலேம், செப்.26
காஸாவில் ஹமாஸ் இயக்கத்தை வழிநடத்திய யாஹ்யா சின்வார் காணாமல்போயுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.
இவர் இஸ்ரேல் தாக்குதலில் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
காணாமல்போயுள்ள யாஹ்யாவைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை இஸ்ரேலும் ஆரம்பித்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.
காஸாவில் சுரங்கப்பாதையில் மறைந்திருந்த ஹமாஸ் தலைவர், ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி ஹமாஸின் தாக்குதலுக்குப் பின்னர் காணாமல்போயுள்ளார். யாஹ்யா சின்வார் பதுங்கியிருக்கலாம் என்று நம்பப்படும் பகுதிகளில் இஸ்ரேல் தாக்குதல் மேற்கொண்டிருந்த நிலையிலேயே அவர் காணாமல் போயுள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது. (எ-இ)

# கமலா ஹாரிஸ் அலுவலகம் மீது துப்பாக்கிச் சூடு

நியூயோர்க், செப்.26
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் கமலா ஹாரிஸின் பரப்புரை அலுவலகம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. அரிசோனானா மாகாணத்தில் டெம்போவில் உள்ள பரப்புரை அலுவலகம் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.
துப்பாக்கிச் சூடு நடத்தியவர் இனங்காணப்படவில்லை. நள்ளிரவு வேளை இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது. தற்போது அந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (எ-இ)

# கமலா ஹாரிஸுக்கு வலுக்கும் ஆதரவு

நியூயோர்க், செப்.26
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தற்போதைய துணை ஜனாதிபதியும், ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான கமலா ஹாரிஸுக்கு ஆதரவு அதிகரித்துள்ளது என்று கூறப்படுகின்றது.
ஆளும் கட்சி சார்பாக தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் மற்றும் குடியரசுக் கட்சி சார்பாக டொனால்ட் ட்ரம்ப் இருவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றனர். ஜனாதிபதித் தொடர்பில் நடத்தப்படும் கருத்துக் கணிப்புகளில் கமலா ஹாரிஸுக்கு மக்கள் ஆதரவு அதிகமாகக் காணப்படுகின்றது என்று கூறப்படுகின்றது.
சிகாகோ பல்கலைக்கழகம் சார்பாக நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் ட்ரம்பை விட கமலா ஹாரிஸ் 38 புள்ளிகள் அதிகமாக பெற்று முன்னணியில் உள்ளார். ஆசிய மற்றும் அமெரிக்க வாக்காளர்களிடையே கமலா ஹாரிஸ் 38 சதவீத புள்ளிகள் முன்னிலை வகிக்கிறார்.
அதேவேளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி கண்டால், மீண்டும் தேர்தலில் போட்டியிடமாட்டேன் என ட்ரம்ப் கூறியிருக்கின்றார். (எ-இ)





# இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல்

நியூயோர்க், செப்.26
இஸ்ரேலின் வடபகுதியை இலக்குவைத்து ரொக்கெட் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளது.
முதலில் 5 ரொக்கெட்கள் வருவதை அறிந்து அவற்றில் சிலவற்றை இடைமறித்தோம், சில ரொக்கெட்டுகள் மனிதர்கள் இல்லாத பகுதிகளில் விழுந்து வெடித்தன என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.
பின்னர் 50 ரொக்கெட்டுகள் வருவதை அறிந்து இடைமறித்தோம், ஆனால் சில கட்டடங்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. தீ பரவலும் ஏற்பட்டுள்ளது என்றும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (எ-இ)

# பயங்கரவாத இயக்கத்துக்கு துணை தமிழகத்தில் என்.ஐ.ஏ. தேடுதல்

சென்னை, செப்.26
பயங்கரவாத இயக்கத்துக்கு தடையை மீறி ஆட்களைச் சேர்த்த குற்றச்சாட்டில் சென்னை உட்பட தமிழகம் முழுவதும் 12க்கும் மேற்பட்ட இடங்களில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் நேற்று முன்தினம் சோதனை நடத்தியுள்ளனர்.
ஹிஷாப் உத் தஹ்ரீர் என்ற அமைப்புக்கு இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்கு ஆட்களைச் சேர்த்த விவகாரம் தொடர்பாக சென்னை ராயப்பேட்டையைச் சேர்ந்த பேராசிரியர் உட்பட பலர் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டுள்ளனர். தற்போது இந்த வழக்கு என்.ஐ.ஏக்கு மாற்றப்பட்டுள்ளது.
இந்தநிலையில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் தமிழகத்தின் பல இடங்களில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. பல இடங்களில் சோதனைகளும் நடத்தப்பட்டுள்ளன. (எ-இ)

# செனகல் கரையோரத்தில் படகில் சிதைந்த உடல்கள்

லண்டன், செப்.26
செனகலின் கரையோரப் பகுதியில் படகொன்றிலிருந்து 30 சிதைந்த உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. தலைநகர் டக்கரிலிருந்து 70 கிலோமீற்றர் தொலைவில் படகொன்று தத்தளிப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் செனகல் கடற்படை இந்த மரப்படகை மீட்டுள்ளது.
படகில் இருந்த உடல்கள் மிக மோசமாக சிதைவடைந்து காணப்படுவதால் மீட்பு அடையாளம் காணும் நடவடிக்கைகள் மிகவும் மெதுவாக இடம்பெறுகின்றது என்று செனகல் கடற்படை தெரிவித்துள்ளது. செனகலில் இருந்து ஸ்பெயினின் கனரி தீவுக்குச் செல்லும் குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் இந்த உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.
உடல்கள் சிதைவடைந்துள்ள நிலையை பார்க்கும்போது குடியேற்றவாசிகள் பல நாள்களாக அட்லாண்டிக் சமுத்திரத்தில் தத்தளித்திருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் படகு எப்போது எங்கிருந்து புறப்பட்டது என்பதை கண்டறிவதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுங்கள்

## பொலிஸாருக்கு முழுச்சுதந்திரம் என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, செப். 26
அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணியாமல், தவறு செய்யும் எவராகினும் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சகத்தில் நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் உரையாற்றும்போதே, பொலிஸார் தங்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அரசியல் அழுத்தங்கள் எதுவும் இல்லாமல் முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடவுச்சீட்டுப் பிரச்சினை பிரதான பிரச்சினையாக உள்ளது, அதனை விரைவில் தீர்ப்பதற்கு முயற்சி எடுக்கப்படும். இது தொடர்பில் பணிப்பாளருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. ஒக்ரோபர் 20ஆம் திகதிக்குள் தற்போது உள்ள கடவுச்சீட்டு வரிசையை முடிவுக்குக் கொண்டுவர புதிய கடவுச்சீட்டு வழங்கக்கூடியதாக இருக்கும் எனக் கூறியுள்ளார். தற்போதுள்ள வரிசையைக் கட்டுப்படுத்துவதற்குரிய மாற்று யோசனைகளை முன்வைக்குமாறும் நாம் கோரியுள்ளோம்.

அதேவேளை கடந்த காலங்களில் பொலிஸார் மீது நாட்டு மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல்போனது. அந்த நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்குரிய பொறுப்பு அமைச்சர் என்ற வகையில் எனக்கும், செயலாளருக்கும், பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கும் உள்ளது. குறுகிய காலப்பகுதிக்குள் இதனை செய்யமுடியும் என நம்பவில்லை. ஆனால் விரைவில் செய்து முடிக்க வேண்டும்.

எவ்வித அரசியல் தலையீடும் இன்றி பொலிஸார் தங்களின் சேவையை முன்னெடுக்க இடமளிக்கப்படும். இதுவரை காலமும் தவறான நடைமுறை இருந்திருந்தால் அதனை மாற்றிக்கொள்வதற்குரிய சுதந்திரத்தை நாம் வழங்குவோம். அரசியல் கட்டளைகளுக்கு அடிபணியாமல், சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு பொலிஸார் செயற்படவேண்டும்.

எமது ஆட்சியில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸாருக்கு எவ்வித அழுத்தங்களையும் பிரயோகிக்கமாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை வழங்கமுடியும். பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் என்பன இனி அரசியல் ரீதியில் வழங்கப்படமாட்டாது. பழைய நடைமுறையை, கலாசாரத்தை மறந்து, புதிய கலாசாரத்தை உருவாக்குவோம். யார் தவறிழைத்தாலும், எமது தரப்பினர் தவறிழைத்தாலும் தவறு தவறுதான். சட்டம் உரிய வகையில் செயற்படவேண்டும் - என்றார். (ஒ-44)

# நாணய நிதியத்துடன் விரைவில் பேச்சுகள்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, செப். 26
அரசாங்கம் சர்வதேச நாணயநிதியத்துடன் உடனடியாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
நாட்டு மக்களுக்கு நேற்று இரவு ஆற்றிய உரையின்போது, அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையின் கடன்மறுசீரமைப்புத் திட்டத்தினை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காக அரசாங்கம் உரிய கடன்வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும். இந்த நாட்டு மக்களினதும் சர்வதேச சமூகத்தினதும் நம்பிக்கையை எங்களால் பெறமுடியும் என நாங்கள் நம்புகின்றோம்.
இந்தக் கூட்டு ஆதரவின் மூலம் வெற்றியைப் பெறமுடியும் என்று கருதுகின்றோம். நாணயநிதியத்துடனான பேச்சுகளைத் தொடர்ந்து வாழ்க்கைச் செலவு கட்டம் கட்டமாகக் குறைக்கப்படும் - என்றார். (ம-இ)

# ஜனாதிபதி அநுரவோடு இணைவதற்குத் தயார்!

## நாணயநிதியம் அறிவிப்பு

கொழும்பு, செப். 26
ஜனாதிபதி அநுரகுமாவுடன் இணைந்து செயற்படத் தயார் என்று, சர்வதேச நாணயநிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா அறிவித்துள்ளார்.
ஜனாதிபதி அநுரவுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே ஜோர்ஜிவா இவ்வாறு தெரிவித்துள்ளார்.
ஸ்ரீலங்காவின் புதிய அரசாங்கத்துடனும் புதிய ஜனாதிபதியுடனும் இணைந்து இலங்கையின் எதிர்கால அபிவிருத்திச் சீர்திருத்தங்களுக்கு உதவத் தயாராக இருப்பதாகவும், கடந்த காலங்களில் இலங்கையுடன் காணப்பட்ட ஈடுபாட்டினை மிகவும் பெறுமதிவாய்ந்த விடயமாகக் கருதுவதாகவும் ஜோர்ஜிவா தெரிவித்துள்ளார்.
நாங்கள் இலங்கைக்கு உறுதியான பங்காளிகளாக இருக்க விரும்புவதுடன், இலங்கைக்கு அதன் சீர்திருத்த இலக்குகளை அடைவதற்கு உதவவும் முனைப்புடன் உள்ளோம் என்ற உத்தரவாதத்தை வழங்குவதற்கு நான் விரும்புகின்றேன் என்றும் அந்தக் கடிதத்தில் ஜோர்ஜிவா மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-சி)

### யாழ்ப்பாண...

மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மாற்றமின்றித் தொடர்கின்றது. இம்முறையும் வன்னியில் இருந்து ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.
அத்துடன் மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்துக்கு 5 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், திருகோணமலை தேர்தல் மாவட்டத்துக்கு 4 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

### தியாக...

நினைவேந்தலின் பிரதான நிகழ்வு இன்று நல்லூரில் தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.
இன்று காலை திலீபன் பிறந்த இல்லமான ஊரெழுவில், ஊர்திப் பவனி ஆரம்பித்து நல்லூரை வந்தடையவுள்ளது. அதனைத் தொடர்ந்து திலீபன் தொடர்ச்சியாக உண்ணாவிரதமிருந்து உயிர்துறந்த நேரமான முற்பகல் 10.48 மணியளவில் திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் வடக்கு வீதியில் சுடரேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.
சமநேரத்தில் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியடியில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டு, மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தப்படுமெனத் தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (அ-ம-66)

### அநுரவைச்...

அவருக்கு இந்தியப் பிரதமர் மோடி தனது வாழ்த்தைத் தெரிவித்திருந்தார். இதன் தொடர்ச்சியாகவே, இந்திய வெளிவிவகார அமைச்சர் அடுத்த வாரம் இலங்கைக்கு வருகை தருவதுடன், ஜனாதிபதி அநுரவைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.
அநுரவை இந்தியாவுக்கு வருமாறு, பிரதமர் மோடி ஏற்கனவே அழைத்துள்ள நிலையில், இது தொடர்பான அழைப்பை முறைப்படி விடுக்கும் வகையிலும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் பயணம் அமைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
கம்யூனிச சித்தாந்தங்களைக் கொண்டவரான அநுரவை சீனா வளைத்துப்போடுவதற்குக் கூடுதலான வாய்ப்புகள் உள்ளன என்று கருதப்படும் நிலையிலேயே, இந்தியா அவருடன் நெருக்கம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

### தமிழ்த்...

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் இல்லத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின்போதே, வீட்டுச் சின்னத்தில் முன்னர் போட்டியிட்ட கட்சிகளை மீண்டும் இணைத்து பலமான அணியாகப் போட்டியிடுவது தொடர்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.
இது தொடர்பான பேச்சுகளையும், முன்னெடுப்புகளையும் மேற்கொள்ளும் பொறுப்பு தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், சரவணபவன், சிவமோகன், யோகேஸ்வரன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (அ-ம-இ)

### மக்களின்...

நாட்டுமக்களுக்கு நேற்று சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மக்களின் விருப்பத்தைத் தெளிவாகப் பிரதிபலிக்கின்ற நாடாளுமன்றம் எங்களுக்கு அவசியம். தற்போதைய நாடாளுமன்றம் மக்களின் விருப்பத்தினைப் பிரதிபலிக்கவில்லை. இதன் காரணமாகவே அதனைக் கலைப்பதற்கான நடவடிக்கையை எடுத்தேன். எங்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தின் அடிப்படையிலும் நாட்டை அரசமைப்பின்படி வழிநடத்தவும் அமைச்சரவை நியமிக்கப்பட்டது - என்றார். (அ-ம-இ)

### இனப்...

போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"ஒருவர் தன்னைச் சிங்களவர், தமிழர், முஸ்லிம் என அடையாளம் காண்பதற்கு அப்பால், அனைவரும் 'நாங்கள் இலங்கையர்கள்' என பெருமையுடன் தெரிவிக்கும் நிலை வரும்வரை நாடு முன்னேற முடியாது. ஆதலால், இலங்கையின் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய அவசியமான அரசமைப்பு, பொருளாதார, அரசியல் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நாங்கள் தயங்கமாட்டோம்.
பன்முகத்தன்மையை மதிக்கும் ஐக்கியப்பட்ட இலங்கையை உருவாக்குவதற்கான திட்டமொன்றை அறிமுகப்படுத்துகின்றோம். இந்தத் திட்டம் இன, மதம், வர்க்கம் அடிப்படையிலான பிளவுகளின் யுகத்தினை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கத்தினை அடிப்படையாக கொண்டது" - என்றார். (அ-ம-இ)

### வடக்கு...

ஆளுநராக நாகலிங்கம் வேதநாயகன் நியமிக்கப்பட்டுள்ளார்.
பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர கிழக்கு மாகாண ஆளுநராகவும், பந்துல ஹரிசந்திர தென் மாகாண ஆளுநராகவும், பேராசிரியர் சரத் அபயகோன் மத்திய மாகாண ஆளுநராகவும், திஸ்ஸ வர்ணசூரிய வடமேல் மாகாண ஆளுநராகவும், சம்பா ஜானகி ராஜகருண சப்ரகமுவ மாகாண ஆளுநராகவும், திஸ்ஸ குமாரசிறி வடமத்திய மாகாண ஆளுநராகவும் நேற்றுப் பதவியேற்றுக் கொண்டனர். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட இடங்களில் ஒரு மாதத்திற்கு ஒரு அறையுடன், நவீன வசதியுடன் கூடிய குளியலறை, மூன்று வேளை உணவு, வாகனத் தரிப்பிடத்துடன் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு :- 077 078 1018

## பணியாளர் தேவை

ஆலயம் ஒன்றிற்கு சுத்தம் செய்வதற்கு பணியாளர் தேவை. ஆசாரசீலராக இருத்தல் வேண்டும்.

வயதெல்லை - 40 - 60

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆலயநிர்வாகம் : 077 859 0980

## பணியாளர் வெற்றிடம்
### யாழ்ப்பாணம்

- தொழிற்சாலை முகாமையாளர் (ஆண் / பெண்)
- தொழில்நுட்ப உத்தியோகத்தர் - ஆண்
- களஞ்சியக்காப்பாளர் (Store Keeper) (கணினி அறிவு உள்ளவருக்கு முன்னுரிமை)
- எழுதுநர் (ஆண் / பெண்) (மும்மொழி தேர்ச்சி, கணினி அறிவு உள்ளவருக்கு முன்னுரிமை)
- வெல்டர் (welders)
- காப்பென்டர் (Carpenter)
- பெயின்ரர் (Painter)
- மேசன்
- மேசன் உதவியாளர்
- தொழிற்சாலை உதவியாளர்கள் (ஆண் / பெண்)


✓ அனுபவமுள்ளவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு
✓ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
✓ நேர்முகத்தேர்வு 30.09.2024 காலை 10.00 மணிக்கு அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

021 224 0110
077 656 6873

EUT
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.
யாழ்ப்பாணம்.

(CR/43284) J-1

## மரண அறிவித்தல்



### சந்திரசேகரன் ஜெரிமயா

கட்டுடை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரன் ஜெரிமயா அவர்கள் கடந்த 16.09.2024 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் ஜெரிமயா - நிர்மலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கெங்காதரன் ஜெரிமயாவின் அருமைச் சகோதரனும், பத்மஜானியின் அன்புக் கணவரும், வித்யானியின் (Former Asst. Manager, Commercial Bank. PLC) பாசமிகு தந்தையும், Dr.ஆரூரனின் (Researcher - US Department of Agriculture, USA) அன்பு மாமனாரும், ஆதர்சனின் பாசமிகு பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் கடந்த (18.09.2024) புதன்கிழமை இடம்பெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும், பல உதவிகளை செய்த அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

305 A, இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தகவல்:
வித்யானி (மகள்)
021 205 4128

(CS/583304) J-1

# ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி தேர்தலை எதிர்கொள்வதற்கு தயார்

*சிவில் சமூகத்துடன் இன்று பேச்சு*

யாழ்ப்பாணம், செப். 26

நாடாளுமன்றத் தேர்தலில் இம்முறை போட்டியிடவுள்ளதாக ஐந்து கட்சிகளின் கூட்டணியான ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதியொன்றில், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றுள்ளது.

இதன்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரை களமிறக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கட்டமைப்பில் உள்ள சிவில் சமூகத்தினரையும் இணைத்துக்கொண்டு இந்தத் தேர்தலின்போது பயணிப்பது தொடர்பிலும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்ட ணிக்கும் தமிழ்த் தேசியக் கட்டமைப்பில் உள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இன்று கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

(ம-26)

## சாரதி தேவை

வியாபார நிறுவனம் ஒன்றிற்கு.
இடம்: யாழ்ப்பாணம், வவுனியா
கனரக வாகனம் (AD)
சாதாரண வாகனம்
(Light Vehicle)

T.P: 077 153 1167

(CS 1446) A-1

## வங்கி மீதி வசதி
## (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 173 7684

(CS/988) J-1

## காணி விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு இராச வீதிக்கு அருகாமை 4 பரப்பு 6 1/2 குழி காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 075 621 3076

# குப்பைக்கு வைத்த தீயால் அழிவடைந்த தென்னைகள்

பளை, செப். 26

குவியலாகக் காணப்பட்ட குப்பைக்கு வைத்த தீ, தென்னைகளில் பற்றிப் பிடித்ததையடுத்து 500க்கும் மேற்பட்ட தென்னைகள் அழிவடைந்தன.

இந்தச் சம்பவம் நேற்றுப் பகல் எழுதுமட்டுவாழ் முகமாலை வடக்கில் இடம்பெற்றுள்ளது.

தீயை அணைப்பதற்காக கிளிநொச்சி மாவட்ட தீயணைப்புப் பிரிவினருக்குத் தகவல் வழங்கப்பட்ட போதிலும் வாகனக் கோளாறு காரணமாக அவர்களால் சம்பவ இடத்துக்குச் செல்ல முடியவில்லை. இதையடுத்து, யாழ்ப்பாணம் மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து தீயணைப்புப் பிரிவினர் சென்று தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இதற்கிடையே 500க்கும் மேற்பட்ட தென்னைகள் அழிவடைந்தன. (ம-9)

## யோக சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம்
## பணிநிலை வெற்றிடம்

எமது இல்லத்தில் கீழ் காணும் பணிநிலைகளுக்கான விண்ணப்பம் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

**01. முகாமையாளர் ( ஆண் )**

கல்வித் தகைமை :- க.பொ.த உயர் தரம் (A/L) அரச தனியார் நிறுவனமொன்றில் குறைந்தது 05 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய அனுபவம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
வயது :- 40 - 65.
அடிப்படைச்சம்பளம்:- 40,000ரூபாவிற்கு மேல் (இதர படிகளும் மற்றும் உணவு, தங்குமிடம் என்பன இலவசம்.)
EPF, ETF என்பன வழங்கப்படும்.

**02.சாரதி ( ஆண் )**

சாதாரண/கனரக வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம்.
வயது :- 25 - 45
சம்பளம் :- 30,000 ரூபாவிற்கு மேல் (இதர படிகளும் மற்றும் உணவு, தங்குமிடம் என்பன இலவசம்.)
EPF, ETF என்பன வழங்கப்படும்.
முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**03.சமையலாளர் ( ஆண் )**

வயது :- 30 - 60
சம்பளம் :- 40,000 ரூபாவிற்கு மேல் (இதர படிகளும் மற்றும் உணவு, தங்குமிடம் என்பன இலவசம்.)
EPF, ETF என்பன வழங்கப்படும்.
முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**04.பராமரிப்பாளர் ( ஆண் / பெண் )**

வயது :- 20 - 40
சம்பளம் :- 30,000 ரூபாவிற்கு மேல் (இதர படிகளும் மற்றும் உணவு, தங்குமிடம் என்பன இலவசம்.)
EPF, ETF என்பன வழங்கப்படும்.

**05.களஞ்சியக்காப்பாளர் ( ஆண் )**

கல்வித் தகைமை :- க.பொ.த உயர்தரம் (A/L)
வயது :- 20 - 50
சம்பளம் :- 30,000 ரூபாவிற்கு மேல் (இதர படிகளும் மற்றும் உணவு, தங்குமிடம் என்பன இலவசம்.)
EPF, ETF என்பன வழங்கப்படும்.
முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**முக்கிய தகைமை :-** நல் ஒழுக்கம், உடற் தகைமை என்பவற்றுடன் அனுபவத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும். தெரிவுகள் நேர்முகத்தேர்வின் மூலம் நடைபெறும். நேர்முகத்தேர்விற்கு தகைமைச்சான்றிதழ்கள் காண்பிக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 15.10.2024.**

விண்ணப்பங்கள் :- தலைவர் / செயலாளர்,
யோக சுவாமிகள் திருவடி நிலைய
முதியோர் இல்லம்,
வன்னேரிக்குளம், கிளிநொச்சி. எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக சமர்ப்பிக்க முடியும்.

15.10.2024ற்கு பின்கிடைக்கும் விண்ணப்பங்கள் எமது இல்ல பணிநிலை நிறைவு செய்யப்படும் வரை செல்லுபடியானதாக கொள்ளப்பட்டு அடுத்த நேர்முகத்தேர்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு :-

அலுவலகம் - 0767099162. தலைவர் - 0775064678, செயலாளர் - 0776495442.

## காயமடைந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் பண்ணைப் பாலத்தடியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நபர் உயிரிழந்தார். லக்சுமிகாந்தன் தனஞ்சயன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் கடந்த 15ஆம் திகதி ஹைஏஸ் வாகனத்துடன் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்திருந்த அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே சிகிச்சையின்போது அவர் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.